செ.வெ.எண்: 342 நாள்: 3.5.2020

**வெளி மாநிலம், வெளி மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகைபுரிந்தவர்கள் தனிமைப்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

வெளி மாநிலம், வெளி மாவட்டத்திலிருந்து புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வருகைபுரிந்தவர்கள் தனிமைப்படுத்தி கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தினைச் சேர்ந்த நாட்டின் பல்வேறு மாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில், சென்னை கோயம்பேடு சந்தை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பணிபுரிந்து தற்போது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு திரும்ப வரப்பெற்ற நபர்கள், தொழிலாளர்கள் தகவல் தெரிவித்தல், தனிமைப்படுத்திக் கொள்ளுதல், மற்றும் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி கொள்ளுதல் அறிவுரை வழங்கப்படுகிறது.

கொரோனா வைரஸ் தொற்று நோய் தடுப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புதுக்கோட்டை மாவட்டத்தில் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டு கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகள் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்நிலையில், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் புதுக்கோட்டை மாவட்டத்தினைச் சேர்ந்த தொழிலாளர்கள் மற்றும் தனிநபர்கள் பலரும் அதிகளவில் சொந்த ஊருக்கு திரும்பி வந்து கொண்டு இருப்பதாக மாவட்ட நிர்வாகத்தின் கவனத்திற்கு தெரியவருகிறது.

இவ்வாறு வரப்பெறும் அனைவரும், பின்வரும் நடைமுறைகளை தவறாது பின்பற்ற வேண்டும். தங்களை தாங்களாகவே தனிமைபடுத்திக்கொள்ள வேண்டும். தங்களது வருகை தொடர்பாக தங்களது வசிப்பிட முகவரியின்

எல்லைக்குட்பட்ட  கிராம நிருவாக அலுவலர், கிராம உதவியாளர்களிடத்தில் பெயர், எந்த மாவட்டத்தில் இருந்து வந்துள்ளார் உள்ளிட்ட அனைத்து விவரங்களையும் தெரிவித்து பதிவு செய்து கொள்ள வேண்டும். அதனைத் தொடர்ந்து அருகிலுள்ள அரசு சுகாதார நிலையத்தில் மருத்துவ பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். மாவட்ட நிர்வாகத்தின் இந்த நடவடிக்கைக்கு அனைத்து பொதுமக்களும் ஒத்துழைப்பு அளித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் மேற்கண்டவாறு தகவல் தெரிவித்திடாமல், கொரோனா நோய் தொற்று பரவிட காரணமாக இருக்கும் நபர்கள் மீது பேரிடர் மேலாண்மை சட்டம், இந்திய தண்டனை சட்டம் மற்றும் தொற்று நோய்கள் சட்டம் ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**